உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

சின்னஞ்சாமி யென்று வழங்கும்

# சின்மயதேசிகர்மாலை.



MADRAS

296

இது

சேலம்

## சி. மாணிக்கமுதலியாரால்

செய்யப்பட்டது.

அண்ணாமலைச்சாமி என்று வழங்கும்

காசிச்சாமியவர்களது நன்முயற்சியால்

தஞ்சை

"வித்தியா விநோதினி அச்சியந்திரசாலையிற்"

பதிப்பிக்கப்பட்டது.

இதன் விலை] பிரமாதீச-ஸ்ரீ ஆடி மீ ௪௨ [அணா 2.

O-7,194MMVI,C
N13
139935

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

## சின்னஞ்சாமி என்று வழங்கும்,

# சின்மயதேசிகர் சரித்திரம்

கடல்சூழ்ந்த புண்ணிய பூமியாகிய பரதகண்டத்திலே எவ்விடத்தும் சிவதலங்களும், தீர்த்தங்களும், வேதமுழக்கமும் யாகாக்கினியும், தருமங்களும், பொருந்தப்பெற்றதாகிய சோழவளநாட்டின்கண் பெருமாளகரம் என்றவூரில் பிறந்தனர் இச்சுவாமிகள். "வேண்டினுண்டாகத் துறக்க துறந்தபி, னீண்டியற்பால பல" என்று தெய்வப் புலமைத்திருவள்ளுவனாரும் "நிட்டையிலேயிருந்துமனத் துறவடைந்த பெரியோர்க ணிமலன்றாளைக், கிட்டையிலே தொடுத்துமுத்தி பெறுமளவும் பெரியசுகங் கிடைக்குங்காம, வெட்டையிலே மதிமயங்கிச் சிறுவருக்கு மணம்பேசி விரும்பித் தாலி, கட்டையிலே தொடுத்துநடுக்கட்டையிலே கிடத்துமட்டுங்கவலைதானே." எனச்சிவப்பிரகாசசுவாமிகளும், நடலைவாழ்வு கொண்டென் செய்திர் நாணிலீர் என வாகீசப் பெருமானும், "அம்பலவனடிசார்ந்து நாமுய்யவேண்டும்" எனத்திருவெண்காடரும், "உடம்பினைப்பெற்றபயனாவதெல்லா, முடம்பினிலுத்தமனைக்காண்" என ஔவைப்பிராட்டியும், திருவாய் மலர்ந்தருளியவாக்குகளுக்கிணங்க, முற்பிறப்புகளிற்செய்ததவப்பேற்றால் இளமையிலேயே அகப்பற்று, புறப்பற்று என்னுமிரண்டனையும் வேரோடுகெடுத்து, மானுடப்பிறவிதானும் வகுத்தது மனம் வாக்காய மானிடத்தைந்து மாடுமரன்பணிக்காக வன்றோ என்றபெரியாருரைப்படி தான் பெற்ற அரியவுடலின்பயனையடைந்தவர். தற்போதங்கழன்று சிவபோதத்தைப்பெற்ற காரணத்தால் நிருவாணியாயிருந்தார். இவரது சாதியும் ஆயுளும் இன்னது இவ்வளவினதெனத் துணியமுடியவில்லை.

இவர் அடியக்கமங்கலமென்னும் ஊரில் எழுந்தருளியிருக்குங்காலத்தில் ஒருவன் வைத்திருந்த எலுமிச்சம்பழத்தோட்டத்துட் பிரவேசித்து பழங்களை உடையவன் அறியாதவிதம் பறித்து வருவதைக் காவற்காரன் கண்டு அவரைத்தோட்டத்துள்ளிருந்த கட்டடத்திற் புகச்செலுத்தி தன் எஜமானனிடஞ்சென்று அறிவித்து அவனையழைத்துவந்துபார்க்குமிடத்து அச்சுவாமிகள் வெளியிலிருந்ததைக்கண்ணுற்று மனந் துணுக்குற்று சுவாமி! அடியேன் அறியாமையிற்செய்தபெரும் பிழையைத் திருவுளத்துக்கொள்ளாது மன்னித்தருள வேண்டுமென்று செந்தாமரைமலர்போன்றஅவரது திருவடிகளில் விழுந்து நமஸ்கரித்துப் பின்பல உபசாரங்களைச்செய்து வா

அத்தோட்டம் முன்கொடுத்த பலனைக்காட்டிலும் பதின்மடங்கு மிக்கபயனையளித்தது.

இவர் நாகூரில் இருபதுவருடகாலம் எழுந்தருளியிருக்குங்காலத்தில், திருவாணியாயிருந்த இவரைத்துருக்கர்கள் மனம் பொறாதவராய்க் கோபாவேசங்கொண்டு இரண்டு கண்களிலும் தில்லம்பாலை நிறைத்து ஓர் அறையிலடைத்துப் பூட்டிவிட மற்றொரு தெருவிற் காணப்பட்டனர். பின்னொரு நாள் இவரது கைகால்களையிறுகக்கட்டி ஆற்றிவிட்டகாலத்தில் வைகைநதியிற் சமணர்காணத் திருஞானசம்பந்தப் பெருமானாரிட்ட ஏடு எதிரேறிச் சென்றதுபோல அவ்வாற்றில் மிதந்து எதிர்ந்து படர்ந்தனர். அக்கட்டுக்கள் சிறிதுபோதிலறுந்துவிடக் கரையிலேறினர்.

பின் திருவாரூரில் ஒரு பரிகாரி வைத்தியஞ் செய்பவன் உபசரிக்க அவன் வீட்டில் தங்கியிருந்தனர். அவன் ஒவ்வொருநாட் காலையிலும் தான் செய்தமருந்துகளை இவரது பாதத்தில் வைத்து எடுத்துப்போய் நோயாளிகளைப் பார்ப்பதுவழக்கம் இவர்வந்தநாள் முதலாக அவனுக்கு மிக்கலாபமதிகரித்தேவந்தது. ஒரு நாள் அஸ்தமனகாலத்தில் வெளியிற்சென்ற அவன் பாதிராவில் தன்வீட்டுக்குவந்தான். இல்லத்தினொரிடத்துச் சயனித்திருந்த சுவாமிகளது கைகால் முதலிய உறுப்புக்கள் வெவ்வேறாக விருப்பதைக்கண்டதிசயித்து உள்ளே சென்றான்.

அதன்பின்னர் இஞ்சிக்கொல்லை என்னுஞ் சிற்றூரில் பத்துவருடமமர்ந்திருந்தனர். பேய்போற்றிரிந்து பிணம்போற்கிடந்திட்டபிச்சையெல்லா நாய்போலருந்தி நரிபோலுழ னன்மங்கையரைத், தாய்போற் கருதித்தமர் போலனைவர்க்குந்தாழ்மை சொல்லிச், சேய்போலிருப்பர்கண்டீருண்மை ஞானந்தெரிந்தவரே என்ற வாக்கிற் கிலக்கியமாய்மைந்த இவரது மகத்துவமுணர்ந்த அவ்வூர் பட்டாமணியவேலை பார்த்துவந்த பிராமணர் ஒருவர் தனக்கு ஐம்பதுவயது வரையிலும்புத்திரப்பேறின்மையால்,

பொன்னுடைய ரேனும் புகழுடைய ரேனுமற்
றென்னுடைய ரேனு முடையரோ—வின்னடிசில்
புக்களையுந் தாமரைக்கைப் பூநாறுஞ் செய்யவாய்
மக்களையிங் கில்லாதவர்—எனப் புகழேந்திப் புலவரும்,

கல்லாமழலைக் கனியூறல் கலந்து கொஞ்சுஞ்
சொல்லாலுருக்கி யழுதோடித் தொடர்ந்து பற்றி
மல்லார் புயத்தில் விளையாடு மகிழ்ச்சி மைந்த
ரில்லாத வர்க்கு மனைவாழ்வி னினிமை யென்னாம் எனவில்லிபுத்தூ[ராருங்

கூறியதையோர்ந்து, புத் என்னும நரகத்தினின்றுங் கரையிலேற்றுபவன் என்னும் பொருள்வாய்ந்த புத்திரனைப்பெறவருந்தி பலவிரதானுஷ்டானங்

சனைக்கைக்கொண்டொழுகுநாளில் இவரது உச்சிட்டத்தையுண்ட காரணமாகப்புத்திரோற்பத்தியுண்டாயிற்று. இச்சுவாமிகளுக்கு யாவரேனும் அன்னத்தை ஊட்டவுண்பதேயன்றிக் கையாலெடுத்துண்ணும்வழக்கமேயெக்காலத்துமில்லை இவரை உண்பித்தபின்னரே ஐயர்தான் உணவுட்கொள்வது வழக்கம்; ஒருநாள், ஐயரது மனைவியார் உண்பிக்க வேண்டிய சாதத்தில் நெய்க்குப் பதிலாக நல்லெண்ணெயைக்கலந்து தூரத்தேகொண்டு வந்ததைத் திருவுளத்துக்கொண்ட சுவாமிகள் நல்லெண்ணெய் துர்நாற்றம் வீசுகிறது என்று கூறினர். அதைக்குறிப்பிலுணர்ந்து அப்பிராமணர்தம்மனைவி கொண்டுவந்த வுணவை மாற்றிவிட்டு வேறுபுதிதாக எடுத்து நெய்கலந்து உண்பித்தனர்.

புதுக்குடியில் ஆறுவருடமெழுந்தருளியிருந்தனர். அக்காலத்திலொருவருக்குமுற்பிறப்பிற்செய்ததீவினையின்பயனாகத்தீராத இரைப்புநோய்நேரிட்டது. அதைத்தீர்க்கும் வைத்தியர்களிடத்துப் பலநாள் மருந்துட்கொண்டும் நோய் நாளுக்குநாள் அதிகரித்ததேயன்றி சிறிதளவாயினும் குறைந்தபாடில்லையாயிற்று. அந்நோயாற் சகியாத துன்பத்தையனுபவித்துக் கொண்டிருந்ததைச்சுவாமிகள் திருவுளத்தடைத்து மண்ணையள்ளிக்கொடுத்துட்கொள்ளச்செய்து அந்நோயக்கணமே யோடப்புரிந்தருளினர்.

பின் குடவாசலில் ஐந்துவருடந்தங்கியிருந்தனர் அவ்வூரில் ஓர் தாசி தன் வீட்டில் உணவுமுதலியவற்றைக்கொடுத்து உபசரித்துவந்தாள். அவ்வூரிலுள்ளார் சுவாமிகளைப் பரிசோதிக்கு நிமித்தமாக அத்தாசியைத்தூண்டிவிட அவள் கட்டியணைத்தபொழுது சத்தமிட்டுக்கொண்டு வெளியே வந்தனர் அந்நாள் முதலாக அத்தாசி தான்செய்யத்தகாத கொடிய தீவினையைப்புரிந்த காரணத்தால் பொருள் வரவின்மையும் மனோதுக்கமுந்தீராவியாதியுமுடையளாய் மெலிவடைந்து சுவாமிகளிருப்பிடத்திற்போய்த்திருவடிகளில் விழுந்து நமஸ்கரித்து "பேதைமையென்பது மாதர்க்கணிகலம்" எனவும் "நுண்ணறிவுடையாராகி நூலொடுபழகினாலும், பெண்ணறிவென்பதெல்லாம் பேதைமைத்தாகும்" எனவும் கூறியவாக்கிற்கிசைய என்போன்றார்க்கு அறியாமை மிகுந்திருக்குங்காரணத்தாற் செய்தவபராதத்தைத் திருவுளத்துக்கொள்ளாது கடைக்கண்சாத்தி மன்னித்தருளல் வேண்டுமென்றுபிரார்த்திக்க, சுவாமிகள் தமது திருவுளத்துக்கருணை கூர்ந்ததினால் முன்போன்ற நல்லநிலைமையை யடைந்து வாழ்ந்திருந்தாள்.

பின்நாச்சியார்கோவிலில்இரண்டுவருடமிருந்தனர். கும்பகோணத்தில் நான்குவருடமிருந்தார். அவ்வூரில் வசித்துவந்த ஓர் வள்ளுவச்சி உணவுமுதலியகொடுத்துஉபசரித்துவந்தாள். ஒருநாள் காவிரியாற்றுப்பாலத்தின் மேலமர்ந்திருக்குங்காலையில் அவ்வழியாகச்சென்ற தாசில்தாரும் அவரது சே

94 MMVI/C

வகனும் தன்னை உபாதிசெய்யச் சுவாமிகள் இவனைப்பாடையிற் பார்த்தன்றி இவ்விடம் விட்டுப் பெயரேன் என்றிருக்க அன்றையதினமே வருத்தஞ்செய்த அத்தாசில்தார் யமபுரிக்கேகினர்.

பின் ஆரியச்சேரியில் ஆறுவருடமமர்ந்திருந்தார். ஒருவேளையில் 3-சேர் மிலகாயை உண்ணுவர். சுவாமிகள் ஸ்நானஞ்செய்யாததினால் சரீரமெல்லா மழுக்குப் படிந்திருக்கின்றன ராதலின் ஸ்நானஞ்செய்விக்கவேண்டுமென்று கருதி அவ்வாறு செய்யின் ஜலத்தையபிஷேகஞ்செய்யும் வரை மௌனமுற்றிருந்து முடிந்தபின் பூமியில் தலையைமோதிக்கொள்வர். இடைவிடாமல் சலத்தையபிஷேகஞ்செய்யில் மோதாமலிருப்பார். சலத்தை யூற்றுவோர் இளைத்துப்போனால் சந்தோஷமுறுவர்.

கண்டராமாணிக்கத்திலுள்ள வொருதட்டான் தனக்குச்சந்ததியில்லாத குறையால் மனம் வருந்தி சுவாமிகளெழுந்தருளியிருக்கு மிடத்தை யடைந்து திருமுன் நமஸ்கரித்துத் தன் குறைகூறி அதை நிவர்த்திக்கத்திருவுளத்தேகொண்டருள வேண்டுமென்று பிரார்த்திக்க அவ்வேண்டு கோட்கிரங்கி அவனைநோக்கி, "உனக்கு இனி இரண்டுவருடஞ் சென்ற பின்னர் புத்திரோற்பத்தியுண்டாகு" மெனத்திருவாய் மலர்ந்தருள, கேட்டுப் புத்திரனைப்பெற்றவனைப்போலமனமிகக்களிப்புற்றுத்தன்னிருப்பிடஞ் சென்று இரண்டுவருடங்கழிந்த பின் ஓர் ஆண்மகவுபிறந்துள்ளது. பேராசையுந் தீராக்கவலையு மொழியாத்துன்பமுஞ் சிற்றின்பமுந்தருமனையாதிய சேற்றிலே கிடந்துழைத்த நெஞ்சையுடைய ஒருவர் போந்து சுவாமிகளது திருவடியில் வீழ்ந்து நமஸ்கரிக்கத் தனது பெருங்கருணையால் ஓர் காலை சிரசிற்சூட்டிக் கால்நாழிகை கழிந்தபின்னெழச்செய்தனர் சுவாமிகள் திருவடி சூட்டப்பெற்ற பெரும்புண்ணியத்தைப்புரிந்தவர் தாம் இல்லறத்திற் பிரவேசிக்கமுயன்று பாணிக்கிரகணஞ்செய்து கொண்டமனைவி யாயுள்சழிய பின்னரிரண்டாவது மணஞ்செய்ய வெத்தனஞ்செய்தும் நிறைவேறப்பெறாமல் காசிமுதலான திவ்ய சிவக்ஷேத்திரயாத்திரைபுரிந்து பசித்திரு விழித்திரு தனித்திரு என்னும் வாக்கியத்திற்கிணங்க ஒருவேளையுணவுந் தெருக்களிற் சென்று பிச்சையேற்றுண்டு குருபணிவிடையிற் சிறந்து இலிங்க சங்கமபத்தியுடையராய் நிராசையைத்தமது பெண்டிராக்கிப் பல்லுயிரிடத்தும் மைந்தரைப்போன்று காருண்ணியங்கொண்டு, எழுபிறப்பினையும் பகையாகப்பெற்று என்றுந் துன்பில்லாத பதம் பெறுங்கருத்துடையராய் வாழ்ந்துவருகின்றனர்.

சென்றமாமககாலத்தில் சன்னாநல்லூரிலுள்ள வைத்தியலிங்கம்பிள்ளையென்பவர் சுவாமிகளைக் கும்பகோணத்திலிருந்து சன்னாநல்லூருக்கு அழைத்துவந்தனர். அங்கு ஆறுமாதஞ் சென்றபின் கலியுகாதி 5010 ல் சௌமிய-ஞூ ஆடி-மீ 31உ ஆதிவாரம் ஆயிலியநக்ஷத்திரங் கூடிய சுபதினத்திற் பேரின்பவெளியிற் கலந்தருளினர். முற்றும்.

உ

திருச்சிற்றம்பலம்.

சின்னாஞ்சாமியென்று வழங்கும்

# சின்மயதேசிகர் மாலை.

## விநாயகர் துதி.

### நேரிசை வெண்பா.

நீர்கொண்ட கடலாடை நேமியுதி மெவ்வுயிருங்
கார்கொண்ட பந்தமறக் கண்ணளிப்பான் — ஆர்கொண்ட
சின்மயங்கொள் தேசிகன்றன் சேவடிப்பா மாலையிட
மன்னருளு மத்திமுகன் வந்து.

### அறுசீர்க்கழி நெடிலாசிரிய விருத்தம்.

அம்பரவிந் தகநெற்றி யல்குற்கண் ணானமாத ரங்க மேத்தி
யம்பரவின் புறுவதென வவர்க்கேவல் வீணியற்றி யலைந்தி டாமற்
சம்பரன்விற் பாதமிரண் டறக்கலந்த மாபாசை தன்ய வாழ்வே
சம்பரவிற் செலுநெறியா னடையவ்னி தருள்சின்னாஞ் சாமித் தேவே.

(இ-ள்) பெண்களுடைய கண்ணை அம்பென்றும் அல்குலை யரவப்படமென்றும் நெற்றியை எட்டாம்பிறைச் சந்திரனென்றும் புகழ்ந்துபேசி அழகிய மேலான இன்பம் பொருந்துவதாகும் என்று அவர்களுக்கு வீணாக இடும் ஏவற்றொழிலைச்செய்து அலையாமல் மேலான சுகத்தைச் செய்யும் மோக்ஷவீட்டிற்குச் செல்லும் வழியை யருளிச்செய்வாயாக சம்பு அரன் என்னுந் திருநாமங்களை யுடையவனது திருவடி நீழலில் இரண்டறக் கலந்து அறிவைச் சொரூபமாகக்கொண்டு வாழ்பவரே சின்னாஞ்சாமி என்னுந் திருநாமத்தைக்கொண்ட தேவரே. (எ-று.)

நிலையாத வுலகவாழ் வினைநம்பி யிறுமாந்து நேர்மை யில்லாக்
கலையாதுங் கல்லாப்புன் சயவர்ப்பற்றி னாயினுமன் கடையே யண்மி
யலையாருந் துரும்பொப்ப வுழலுவே னுய்வழியிங் கறிந்தி லேனுக்
கிலையாருந் துணையுன்னை யின்றிவே றருள்சின்னாஞ் சாமித் தேவே [2]

(இ-ள்) அழிந்துபோகின்ற வுலக வாழ்க்கையைக் கெடமாட்டாது என்று உறுதிகொண்டு அதனால் இறுமாப்பையடைந்து கற்கவேண்டிய அறம்பொருளின்பம் வீடு என்பவற்றை விளக்கும் நூல்களைப் பயிலாது நல்

லொழுக்கமின்றித் திரியுங் கீழ்மக்களை யுறவுகொண்டு அங்காடி நாய்போல இழிவைப்பொருந்திக் கடலலையிலகப்பட்ட துரும்பைப்போல சுழலுகின்றதனால் உய்யும் வழியையறியாத் எளியேனுக்குத் துணை யுன்னையல்லாமல் வேறு ஒருவருமில்லை ஆதலினருள்வாயாக.

பசிதீர வுண்பதுவு முறங்குவதும் புரியுமதே பாரிலெய்துங்
கசியூறு மின்பமெனக் கைக்கொண்டு துன்பமுறு கலதி யேனுக்
கசியோது தத்துவமென் னுபதேச மருளிமரு ளகன்று வாழச்
சசியூரும் வசிபெற்ற சுகோதய வாள்சின்னஞ் சாமித்தேவே. [3]

(இ-ள்) பசிதீரவுண்ணல் பின் நித்திரைசெய்தல் என்னுமிவற்றையே இன்பமாகக்கொண்டு துன்பத்தையடைகின்ற எளியேனுக்கு தத், துவம், அசி என்னுமகாவாக்கியத்தை உபதேசித்து யான் மயக்கநீங்கி வாழும்படி அடிமைகொள்ளுவாயாக சத்தியின் வாயிலாகச் சிவத்தையடைந்தவரே.

ஐவராலிங் கலைப்புண்டு காமாதி கனல்மூள வவிந்து நீறு
யுய்வகைசற் றுணராம லலையுமெனை யாள்வையோ வுயர்வரம்பிற்
செய்வளைமுத் தீனுபுனல் வளைசன்ன ஆரமருஞ் செய்யகுன்றே
சைவமுதற் சமயமெலாங் கடந்தபொருளடைசின்னஞ் சாமித்தேவே [4]

(இ-ள்) பஞ்சேந்திரியங்களாற் கவரப்படுகின்ற சத்த, பரிச, ரூப, ரச கந்தமாகிய ஐந்து விஷயங்களால் அலைக்கப்பட்டுக் காமக்குரோத லோப மோக மத மாற்சரியமென்னும் அக்கினி யோங்கியெழுந்து என்னை வலி கெடுத்துவிட அதனால் உன்றிருவடியடைந்து பிழைக்கும்வழி தெரியாமல லைகின்ற என்னையு மடிமைகொள்ளுவாயோ வயலில் உயர்ந்த வரம்புகளி லுள்ள சங்குகள் முத்துக்களைச் சொரிகின்ற சலத்தாற் சூழப்பட்ட சன்னவூரில் திருக்கோயில்கொண்டெழுந்தருளி யிருக்கின்ற சிவந்தமலைபோன்றவரே புறப்புறம், புறம், அகப்புறம், அகம் என நான்கு கூறாய் இருபத்து நான்கு வகையாயுள்ள சமயங்களெல்லாவற்றையுங் கடந்துநின்ற பரம்பொருளினிடத்துக் கலந்தவரே.

கண்ணாரக் கண்டுருகி நெஞ்சமுவந் தேத்தியுன்றாள் கருது நல்லோர்
நண்ணாருக் கூட்டமிடை யிருத்தியெனை யாள்வையோ நனைவி ரிந்த
கண்ணாரக் கால்பெருகிக் கழைவிளைக்கும் வயல்சூழக் கமலை வாழும்
தண்ணாரு மாடநிரைச் சன்னவூ ரமர்சின்னஞ்சாமித்தேவே. [5]

(இ-ள்) உன்றிருவுருவைக் கண்களால் நன்றாகநோக்கி மனமுருகிச் சந்தோஷித்து உன்றிருவடியைத் தியானிக்கின்ற பெரியோர்கள் பொருந்திய அரிய அழகிய திருக்கூட்டத்திடையில் என்னை இருக்கச்செய்து அடி

MADRAS

மைகொள்ளுவாயோ பூக்களினின்றுமொழுகிய தேனாகிய நீர்வாய்க்காலிற் சென்று கரும்பை விளையச்செய்கின்ற வயல்கள் சூழப்பெற்ற இலக்குமி வசிக்கின்ற குளிர்ச்சி நிறைந்த மாடவரிசைகளையுடைய சன்னூரிற்றிருக் கோயில்கொண்டெழுந்தருளி யிருப்பவரே.

மலஞ்சோரு மொன்பதுவாய்க் குடிலோம்பி மனக்குரங்கின் வழியேயோடி
யலமார்ந்து செய்வகையிங் கறியாப்புன் புலையேற்கு மருளு வாயோ
குலமாதர் களைகளையக் கண்ணிழலைக் கயலென்று கொத்து நாரை
தலநோக்கி யுளநாணுஞ் சன்னூ ரமர்சின்னுஞ் சாமித் தேவே. [6]

(இ-ள்) மலமொழுகுகின்ற ஒன்பது துவாரத்தையுடைய குடிசையாகிய சரீரத்தைப் பாதுகாத்து மனமாகிய குரங்கு போனவழியெல்லாஞ் சென்று சஞ்சலம்பொருந்திச் செய்யும் விதமறியாமலிருக்கின்ற இழிவையுடைய எனக்கும் திருவருள் செய்வாயோ மேன்மைதங்கிய பெண்கள் வயலிற்போய் அங்குள்ள களையைப் பிடுங்கிக்கொண்டிருக்க அவரது கண்ணின் நிழலை மீனென்று நினைத்துக் கொத்துகின்ற நாரையானது பூமியைப் பார்த்து வெட்கமடையும்படியான சன்னூரி லெழுந்தருளி யிருக்கின்றவரே.

குத்திரம்பொய் கொலைகளவு காமாதி களைந்துனது குரைகழற்கே
சித்திரமொத் தசைவற்ற வுளமூன்றி நிற்குநாள் சேருங் கொல்லோ
பத்தியினிற் குயிர்றுமணி மாடங்க ணெருங்குகொடிப் பரப்பு வானிற்
றத்திரவி மான்கடவுஞ் சன்னூ ரமர்சின்னுஞ் சாமித் தேவே. [7]

(இ-ள்) வஞ்சனை, பொய், கொலை, களவு, காமம் முதலியவற்றை நீக்கி உனது திருவடியில் சித்திரத்தைப்போல அசைதலிலாத மனதை நாட்டி நிற்கும் நாள்வருமோ அறியேன் வரிசையாக ரத்தினங்கள் பதிக்கப் பெற்ற மாடங்களில் நெருக்கமாகக் கட்டியுள்ள கொடிகள் ஆகாயத்தில் சூரியனது தேரை இழுத்துச் செல்லுகின்ற குதிரைகளைச் செலுத்தும் படியான சன்னூரி லெழுந்தருளியிருக்கின்றவரே.

அத்திரமெய் யெனவுணர்த்து நூல்கற்றும் பெரியர்வா யறிந்தும் வாழ்வை
நத்திமட மாதர்பொருள் மாமனை தேடுவா னாளைப் போக்கிப் [த்த
பித்தனென வலைந்தெய்த்தேன் வழியொன்றுங் காண்கிலேன் பேர்படை
குத்திரமென் கூடமுயர் சன்னூ ரமர்சின்னுஞ் சாமித் தேவே. [8]

(இ-ள்) சரீரம் நிலையில்லாதது என்று அறிவிக்கின்ற நூல்களை வாசித்தும் பெரியோர்களிடத்துத்தெரிந்தும் உலகவாழ்வை விரும்பிப் பெண்

பொன், மாடு, வீடு என்பனவற்றைத் தேடுவதற்காக வாழ்நாளை வீணாகப் போக்கிப் பைத்தியக்காரனைப்போலத் திரிந்து இளைத்தேன் உய்யும் வழியைச் சிறிதாயினும் காணும் வலியில்லேன் பெருமைபொருந்திய மலையென்று சொல்லத்தக்க மாடங்களுயர்ந்துள்ள சன்னாவூரிலெழுந்தருளியிருக்கின்றவரே.

படியுறுமைம் புலவாசை மயக்கதனிற் படரலெனப் பகர்ந்து மென்றன்
படிதொடராப் பாவிநெஞ்ச மெனைக்கெடுப்ப தோர்கிலேன் படிற னேனைக்
கடிகமழுந் தாமரைச்செஞ் சேவடியென் றலைவைத்துக் காத்தாள் வாயோ
தடியயல்சூழ்ந் தழகாருஞ் சன்னாவூ ரமர்சின்னாஞ் சாமித் தேவே. [9]

(இ-ள்) பூமியிற்பொருந்திய சத்த, பரிச, ரூப, ரச, கந்தமாகிய விஷய இச்சையில் மயங்கிச் செல்லாதே எனச் சொல்லியும் என் வழிவாராத பாவி நெஞ்சமானது என்னை யழிக்குந் தன்மையை அறியும் வலியில்லேன் பொய்பேசுகின்ற என்னை வாசனை வீசுகின்ற தாமரை மலர்போன்ற திருவடியைச் சிரசிற்சூட்டி அடிமை கொள்ளுவாயோ வயல்கள் பக்கத்திற் சூழப்பெற்று அழகு நிறைந்த சன்னாவூரி லெழுந்தருளியிருக்கின்றவரே.

பேயனையேன் பெருவினையா லிடிப்புண்டு பலகாலும் பிறந்தி றந்த
தேயமெனைப் பலவீன்ற வன்னையெனைப் பலர்மாயை சேருமின்ப
நேயமட மாதரெனைப் பலரணைந்தா ரினியானு நீயிரங்கித்
தாயனைய தண்ணளியா யிவ்வேழைக் கருள்சின்னாஞ் சாமித்தேவே. [10]

(இ-ள்) பேயையொத்த யான் வினைகாரணமாகப் பலதடவை பிறந்து இறந்துபோன தேசங்களெத் தன்மையான பலவுள்ளன, என்னைப்பெற்ற தாயர் எத்தன்மையானவர் பலர் இன்பத்தைத் தருகின்ற அன்பு பொருந்திய பெண்கள் எத்தன்மையானவர் பலர் என்னோடு கலந்திருந்தார்கள் இனியாகிலும் இவ்வாறு பிறந்திறவாது தாயையொத்த கிருபையுடையவனே இந்த அறிவிலாதவன்மீது இரக்கங்கொண்டு திருவருள் செய்வாயாக.

எப்பிறவி யினுமருமை வாய்ந்தமனி தப்பிறப்பி னெனையியைத்த
செப்பரிய பெருங்கருணைக் குன்றமே யுன்னிணைத்தாள் சேர்வதென்றோ
மைப்படியுங் கண்ணார்த மோகமெனுஞ் சுழியினிடை மயங்கியந்தோ
விப்படியி னுழல்கின்றே னென்செய்வே னருள்சின்னாஞ் சாமித்தேவே. []

(இ-ள்) எண்பத்துநான்குலக்ஷ பேதமான பிறவிகளிலும் அருமையான மனிதப்பிறவியை எனக்குக் கொடுத்த கிருபாமலையே உனது திருவடியைச் சேர்வதெக்காலமோ மைபூசிய கண்களையுடைய பெண்களிடத்து

வைத்த மயக்கமென்னுஞ் சுழியிலகப்பட்டு மயங்கி யிந்தப் பூமியிற் சுழலு கின்றேன் செய்யும் வகையறியேன் ஆதலிற் றிருவருள் செய்வாயாக.

கருமையிடப் பாகன்வரு முன்னமுன திணைமலர்த்தாள் கருதுகில்லேன்
கருமையிடப் பாகனைய விழியஞ்சொன் மாதர்தோட் கதியாப் புல்வேன்
மருளுமலப் பிணிப்பெங்ங னகலுவேன் வகையின்றி மாள்வேன்கொல்லோ
தெருளுமனத் தன்பர்குழாத் தென்னையிருத்தி யருள்சின்னாஞ் சாமித்தேவே.

(இ-ள்) கரிய எருமைக்கடாவைச் செலுத்தும் எமன் வருவதற்கு முன் உனது திருவடிகளைத் தியானிக்கமாட்டேன், மைபூசிய கரிய கண்களையும் அழகிய பாகையொத்த சொற்களையுமுடைய பெண்களது தோளைக் கதியாகத் தழுவுவேன் ஆதலின் மயங்குதற் கேதுவாகிய ஆணவமலக் கட்டினை யெவ்விதம் நீங்குவேன் உய்யும் விதமில்லாமல் வீணே இறந்து படுவேனே தெளிவுபொருந்திய மனத்தையுடைய அடியார் கூட்டத்தி லென்னை யிருக்கச்செய்து அருளுவாயாக.

பாரெலாங் களிக்கமயிர் சிலிர்க்கவுரை குழறக்கண் பனித்துவாரச்
சீரெலாம் பாடியுனை யானந்தத் தழுந்துகின்றார் தேர்ந்த நல்லோர்
ஏரெலாம் பூண்முலையார் தந்திறத்தே யொழுகுறுவே னெவ்வாறுய்வேன்
காரெலா மொருபிழம்பா மன்பர்பணி யருள்சின்னாஞ் சாமித்தேவே. [13]

(இ-ள்) மயிர்சிலிர்க்கவும் உரைகுழறவும் கண்ணினின்று நீர் ஒழுகவும் உன்னைப் புகழ்ந்துபாடி ஆராய்ந்த பெரியோர்கள் ஆனந்தத்திலமிழ்கின்றார்கள். அழகிய ஒளிவீசுகின்ற ஆபரணத்தைத் தரித்த தனங்களையுடைய பெண்கள்வசமாக நடக்கும் யான் எவ்விதம் நற்கதியடைவேன் அன்பெலாம் ஒரு வடிவுகொண்ட அடியாரது ஏவலை யான் செய்யும்படித் திருவருள் புரிவாயாக,

பாவிமனக் கெவ்விதஞ்சொன் னாலுமென துரைகடந்து பாக்குமந்தோ
வேலியலுங் கண்வேலின் மாழ்கிமலைக் குவடேறி யேறவொண்ணா
தாவியலும் படுகுழியின் வீழ்ந்திளைத்துக் கையறலே சாருமொன்று
மாவியலு மாறென்னோ வென்றையே யருள்சின்னாஞ் சாமித்தேவே. [14]

(இ-ள்) பாவத்தைச் செய்தலிலே விருப்பங்கொண்ட எனது மனசுக்கு என்னவிதஞ் சொன்னாலும் சொல்லைக் கடந்துபோய் பெண்களது பாணத்தையும் வேலையுமொத்த கண்ணால் மயங்கித் தனமாகிய மலையுச்சியிலேறி ஏறமுடியாத வருத்தத்தைத் தாத்தக்க அல்குலாகிய படுகுழியில் வீழ்ந்து இளைத்து செயலறுதலையே பொருந்தும். சிறிதாயினும் என்னாற் செயக்கூடியது என்ன உள்ளது எனது [illegible] அருள்புரிவாயாக.

அன்புகொண்டா ரெவரேனுங் கல்லாலும் பிரம்பாலு மதிர்வில்லாலும் [ம்
வன்புகொண்டா ரெறிந்தாலு முவக்குமுனை யடிக்கும்வகை வலிந்துரைத்து
புன்புகொண்டா ரணிவாழ்வை யுகப்பதல்லா விணங்குதலெப்போதுமின்று
லென்புகொண்டா யணியாக விகழாதேற் றருள்சின்னஞ் சாமித்தேவே.

(இ-ள்) வலிமைகொண்டு சாக்கிய நாயனார் கல்லாலெறியவும் பாண்டியன் பிரம்பாலடிக்கவும் முழங்கும் வில்லால் அருச்சுனன் மோதவும் சந்தோஷிக்கின்ற உன்னை யாவராயிருந்தாலும் அன்புடையவர்களாயிற் பொருந்தும் விதத்தை மனசுக்குச் சொல்லியும் அற்பமிருந்த உலகவாழ்வை விரும்புவதேயல்லாமல் எனதிஷ்டப்படி சம்மதித்தல் எக்காலத்துமில்லையாதலால் எலும்பையாபரணமாகக்கொண்டவரே என்னையுமவமதியாது ஏற்றுத் திருவருள் புரிதல்வேண்டும்.

உனைச்சரணமாகவடை நாயேனுக் கிரங்காதிவ் வுலகர்போல
முனைத்தவஞ்ச மாகியிருந் திடினீயு மென்செய்வேன் முழுத்தபாவி
முனைத்தவஞ்செ யாதவன்பேய் போலவலை வேற்கருளாய் முதுவளஞ்சால்
வனைப்பதிசொன் மாசன்னை யினிற்கோயி லமர்சின்னஞ் சாமித்தேவே []

(இ-ள்) உன்னையடைக்கலமாக அடைந்த எளியேனிடத்து இரக்கங் கொள்ளாமல் இந்த வுலகத்தாரைப்போல நீயும் மிக்கவஞ்சகமுடையவனாகி யிருந்தால் என்னசெய்வேன் மிகுந்த பாவத்தைச்செய்தவன் முற்பிறப்பினிற் றவஞ்செய்யாதவன் பேய்போலத்திரிகின்றவன் ஆகிய எனக்கு அருளுவாயாக, முதிர்ந்த வளப்பம்பொருந்திய அலங்கரித்தலையுடைய புகழ்ச்சியமைந்த சன்னாவூரிற் றிருக்கோயில்கொண்டெழுந்தருளியிருக்கின்றவரே.

[காலம்போக்கித்
கண்டனமே சொன்னடைகண் ணெனமடவார்ப் புனைந்துரைத்துக்
தண்டாமன் றூதரெனை யணுகியுருத் தலறமனைத் தறுகட்பாசங் [தேனேர்
கொண்டிறுகப் பிணித்தேகுங் கொடுமைமறந் துழல்கின்றேன் குடைந்து
தண்டலைக ளோங்குசன்னைப் பதிகோயி லமர்சின்னஞ்சாமித்தேவே [17]

(இ-ள்) சொல் கற்கண்டொக்கும், நடை அன்னநடையையொப்பாகும் கண் பாணத்தையொக்கும் என்று பெண்களை யலங்கரித்துச் சொல்லி வீணாகக் காலத்தைக் கழித்துத் தண்டனைசெய்யும் யமதூதரென்னிடத்து வந்து கோபித்து மனைவிபுலம்ப அஞ்சாமையோடு கயிற்றாலிறுகக்கட்டிச் செல்லும் கொடுமையை மறந்து திரிகின்றேன், வண்டுகள் பூவைக் குடைந்து தங்கியுள்ள சோலைகளுயர்ந்த சன்னாவூரிற் றிருக்கோயில் கொண்டருளியவரே.

பதஞ்சலிவி யாக்கிரபா தருங்காண வம்பலத்தோர் பதமே லோச்சி
பதஞ்சலிவி லதொன்றை யூன்றிநட மிடுமிறையுன் படிவ மாற்றிப்
பதஞ்சலமென் றைம்புலனைச் சுட்டறுத்த மெய்யடியார் பரவ வன்னார்க்
கிதஞ்சலியா தருள்வந்த வெந்தையே யருள்சின்னாஞ் சாமித்தேவே. [18]

(இ-ள்) பதஞ்சலிமுனிவரும் வியாக்கிரபாதமுனியுந் தரிசிக்கச் சிற்சபையில் ஓர் காலைத்தூக்கி மற்றொரு காலைக் கீழேயூன்றி நடனஞ்செய்கின்ற தலைவனே யுனது வடிவத்தைமறைத்து இந்திரன் பிரமன் விஷ்ணு முதலானவரது பதவிகளைப் பொய்யென்று அவற்றைக் கருதாது ஐம்புலனையுங் கெடுத்த அடியார்கள் துதிக்க அவர்களுக்குச் சலியாமல் நன்மையைக்கொடுக்கவந்த எம தந்தையே அருளுவாயாக.

பொய்யன்றி மெய்யுரையா நாவினேன் வன்னெஞ்சன் போற்றியுன்றா
ளுய்யும்வகை சிறிதுமுண ராப்பேதை வுதியொப்ப வோங்கியுள்ளேன்
றையலர்த மையல்வலைப் பட்டழுங்கு வேனெனினுந் தாய்நிகர்க்கு
மெய்யநின தருளிலையேற் றிகைப்பதன்றிச் செயக்கடவ வேறியாதே.[19]

(இ-ள்) பொய்யே பேசுகின்ற நாவையுடையேன் உருகாத நெஞ்சத்தையுடையவன் உனது திருவடிகளைத்துதித்துப் பிழைக்கும்வகை சிறிதுமறியாதவன், உதியமரத்தைப்போல வளர்ந்திருக்கின்றேன் பெண்களது மயக்கமாகிய வலையிலகப்பட்டு வருந்துவேனாயினும் கருணைசெய்வதில் தாயையொத்த உனது திருவருளில்லையாகுமாயின் நான் திகைப்பதல்லாமல் செய்யத்தக்கது என்ன இருக்கிறது.

வித்துவிதை யாதுபயிர் விளைக்கமுயல் வீணர்தமை விழைந்து போந்து
பத்தியெனதுள்ளத்தி னெட்டுணையு மின்றிமுத்தி பற்றவெண்ணும்
பித்துறுமிப் பேதைக்குன் கருணைபுரி யாயெனிற் பின்னாருள்ளார்
சத்தறிவு மயமான வாதனே யருள்சின்னாஞ் சாமித்தேவே [20]

(இ-ன்) நிலத்தில் விதையை விதைக்காமலே பயிரைவிளைக்கவேண்டுமென்றெண்ணுகிற வீணர்களையொப்ப எள்ளளவாயினும் எனது மனசில் பத்தியில்லாமல் முத்தியடைய நினைக்கின்ற பைத்தியங்கொண்ட இந்த அறிவில்லாதவனுக்குக் கிருபைசெய்யாவிடில் பின்பு எவர்செய்வார் உளர் சத்து சித்து மயமானவனே விரும்பிய வரத்தைக்கொடுப்பவனே ஆதலினருளுவாயாக.

அரியதவம் புரிவோரை யடுத்திலேன் வஞ்சமன மார்ந்ததீயர்
புரியுநெறி தனிலோடித் துன்பமெனும் வாரிதனிற் புகுந்துமூழ்கி

விரியுமரு வீசுகின தடிமறந்தே னிளைக்கின்றேன் வினையினேனை
யிரியுமல வடியவர்த மிடையுறுமா றருள்சின்னஞ் சாமித்தேவே [21]

(இ-ள்) பிறராற் செய்தற்கரிய தவஞ்செய்வோரைச் சாரமாட்டேன் வஞ்சகம்பொருந்திய மனத்தையுடைய கொடியார் விரும்பிய மார்க்கத்திற்போய்த் துன்பக்கடலில் முழுகி விரிந்த வாசனையை வீசுகின்ற உனது திருவடியைத் தியானிக்காது மறந்து இளைப்படைகின்றேன் தீவினையுடைய என்னை ஆணவமலங்கெட்ட அடியாரிடையிற் பொருந்துமாறு செய்தருளுவாயாக.

வெள்ளங்கொண்டோங்குசடை மறைத்துவந்த பெருமானே வெறுத்தவாழ்
யுள்ளங்கொண் டெய்யுமடி யார்மனமே கோயிலா வுவந்தநேயா [வை
கள்ளங்கொண்டேய்க்குமட மாதரெனும் பேய்கொள்ளக் கலங்கித்தூண்டி
னள்ளங்கொண் மயிலையென மீளுகிலே னருள்சின்னஞ் சாமித்தேவே.

(இ-ள்) கங்காநதியைத்தாங்கிய சடையை மறைத்து இவ்வுலகில் வந்தவனே உலகவாழ்வை வெறுத்த அடியாருடைய மனசையே கோயிலாகக் கொண்டவனே வஞ்சனையைப்பொருந்தி எமாற்றுகின்ற பெண்களென்கின்ற பேயானது என்னைப்பிடித்துக்கொள்ள அதனால்மனங் கலக்கத்தையடைந்து தூண்டிலிற்பட்ட மீனைப்போல திரும்பும் வலியில்லேனுதலி னருள்புரிவாயாக.

பல்லாய காகமொரு கல்லினெதிர் நிற்குமோ பரந்த வெல்லும்
சொல்லாய சூரன்முன மகலாது நிலைபெறுமோ சூழ்ந்த கன்ம
வல்லாய சோதியே யுனையடுப்பி னிரியாமை யில்லதோசொல்
செல்லாய பொழிலோங்கு சன்னைதனிற் றிகழ்சின்னஞ் சாமித்தேவே. [ ]

(இ-ள்) ஒரு கல்லெறிந்தாலதன்முன் பலகாகங்கள் நிற்குமோ இருளும் சூரியன்முன் நிலைநிற்குமா கன்மவலியுமழகிய சோதிமயமான உன்முன் யான் அடுத்தால் கெடாமலிருக்கவல்லதோ சொல்லுவாயாக, மேகங்கள் நிறைந்த சோலை சூழ்ந்த சன்னைூரிலெழுந்தருளி யிருப்பவரே,

இருட்டறையின் வாளாது கிடந்தவுயிர் தமக்கிரங்கி யாக்கைதன்னைத்
தெருட்டுமெந்தக் கரணமொடு புவனபோ கங்களுறச் சேர்த்தனுமன்
றருட்குருவென் றவனிவஞ்ச வாழ்வையுவர் துழலாமை யறிவுறுத்தி
மருட்கெடவர் தடிமைகொளும் வாதனே யருள்சின்னஞ் சாமித்தேவே.

(இ-ள்) கேவலா வஸ்தையில் ஆணவமலத்திற் கட்டுண்டு யாதொரு செயலுமின்றிக் கிடந்த உயிர்களுக் கிரங்கி தனுகரண புவன போகங்களைக்

கொடுத்ததுமல்லாமல் குருமூர்த்தங் கொண்டெழுந்தருளிவந்து உலக வாழ்வில் சுழன்று கெடாமல் அறிவுறுத்தி மயக்கங்கெட அடிமைகொள்ளுகின்றவனே யருளுவாயாக.

சும்மாவி ருந்திடிற்சு கம்பெறலா மெனவறிஞர் சொல்லுந் தேறேன்
அம்மாபற் பலகாலுங் கேட்டிருந்தும் விடருகுத்த வப்பாலென்ன
விம்மாதர் மாலழுந்தி விட்டனனுய் வகையறியே னியமன் றூதர்
வம்மோவென் றழைக்குமுன முனதடிசேர்த் தருள்சின்னுஞ் சாமித்தேவே.

(இ-ள்) "என்னுணை என்னுணை யேகமிரண் டென்னுமற், சும்மா விருவென்றான் றிருஞானசம்பந்தன்" எனவும், "சும்மாவிரு சொல்லற வென்றலுமே வம்மா பொருளொன்று மறிந்திலனே" எனவும் பெரியாரருளிய வாக்கைக் கற்றுத் தெளியாதவனாகிப் பின் பலர் எடுத்துச்சொல்லக் கேட்டிருந்தும் நிலப்பிளப்பிற் சிந்திய பாலைப்போல பெண்களது மயக்கத்தி லமிழ்ந்தினேன் உய்யும் விதத்தை யறியமாட்டேன். இயமதூதர் என்னை நோக்கி வருவாயாக என்று கூப்பிடுமுன் உனது திருவடியிற் சேர்த்தருளுவாயாக.

மலமொழுகுந் துளையொன்பான் பெற்றுவளர் புழுவுடலை வளர்த்ததா
டலகைநரி பேய்கழுகு காகமுத லானதம வாக வுன்னிப் [யோ
பலம்படுமென் றிருப்பவென தெனப்படர்ந் திறுமாக்கு மாதனேனைச்
சலமருவும் வாழ்க்கையுறா துன்மலர்த்தா ளருள்சின்னுஞ் சாமித்தேவே.

(இ-ள்) ஒன்பது துவாரங்களின் வழியாக மலமொழுகுகின்ற சரீரத்தைப் பெற்றதாயும், அலகையும், நரியும், பேயும், கழுகும், காகமும் தங்கள் தங்களுக்குப் பிரயோசனமாகும் என்று இருக்க யானுமிந்த உடலை என்னுடையது என்று நினைத்து இறுமாப்பை யடைகின்ற அறிவிலாதவனைப் பொய்பொருந்திய வாழ்வை யடையாமல் உனதுதிருவடியி னடைக்கலமாகச் சேர்த்தருள்வாயாக.

இமைப்பொழுதா யினுமெனது மனக்குரங்கு தானடங்க விருந்த தில்லை
யெமைப்புரைவா ரெவரென்னக் களிகூரப் புரிகின்ற வாணவத்தைக்
குமைத்தலையான் செயுநெறியுங் கண்டிலே னும்பர்தாங் கூடிப் போற்றுஞ்
சுமைத்தலையா ரொண்கழலென் சிரஞ்சூட்டி யருள்சின்னுஞ் சாமித்தேவே.

(இ-ள்) ஒருகணமாயினும் என் மனக்குரங்கு அடங்கியிருந்ததாகிடையாது. எம்மை ஒப்பவர் ஒருவருமில்லையெனச் செய்கின்ற ஆணவங் கெடும் வழியுங் காணப்படவில்லை. தேவர்கள் துதிக்கின்ற ஒலியைத் தன்னிடத்துண்டாக்குகின்ற ஒள்ளிய திருவடியை யெளியேனது சிரசில் அமைத்து அருளுவீராக.

பொன்னுடையர் தமைநாடி யவர்வாயிற் சென்றவமே போக்குகின்றேன்
மன்னுலக வாழ்வையிவர்ந் துன்னடியை நினையாத மாபாவிக்குங்
கொன்பெறுநின் னருள்கூடு நாளுமுள தோவென்னக் குழையுநெஞ்ச
வன்பனையு மடிமைகொளிற் குறைவருமோ வருள்சின்னாஞ் சாமித்தேவே.

(இ-ள்) செல்வவான்களைத் தேடிச் சென்று காணும்பொருட்டு அவர் வாயிற்காத்து வீணாகக் காலத்தைக் கழிக்கின்றேன், பொருந்திய உலக வாழ்க்கையை விரும்பி உனது திருவடியைத் தியானியாத பாவிக்கும் பெருமைபெற்ற உன் அருள் கூடுங்காலமுளதாகுமோ என்று வாடுகின்ற நெஞ்சையுடைய கொடியேனையு மடிமைகொண்டாலுனக்கு யாதொரு குறைபாடு முண்டாகமாட்டாது ஆதலாற் றிருவருள் புரிவீராக.

மாற்றுயர்ந்த பசும்பொனிடை மணிகுயிற்றுங் கோயில்வாய் மன்னவுன்னை
யேற்றுதலின் றடைவாவ லெனமனத்திற் பேராசை யிருத்திவைத்தேன்
தாற்றுயர்ந்த பூகதந்தெங் கினியபல மாஞ்சோலைத் தருக்கள்வானைப்
பாற்றுயர்ந்த வளஞ்சாலும் பதிசன்னை யமர்சின்னாஞ் சாமித்தேவே. [29]

(இ-ள்) பொன்னில் மணியிழைத்துச் செய்யப்பட்ட கோயிலிலுன்னைப் பிரதிஷ்டைசெய்யாமல் வௌவாலை யடையச்செய்தாற்போல எனது மனமாகிய கோயிலிலுன்னை யேற்றித் தியானியாமல் பேராசையை நிறைத்து வைத்துவிட்டேன், குலைகளையுடைய கமுகு, தெங்கு, பலா, மா முதலிய நெருங்கிய சோலையிலுள்ள விருக்ஷங்கள் தேவலோகத்தை வருத்த உயர்ந்த வளப்பநிறைந்த சன்னாலூரிற் றிருக்கோயில்கொண் டெழுந்தருளியிருக்கின்றவரே.

உன்போலு மோர்தெய்வ மொப்பிலின்பந் தன்னடியார்க் குவந்தளிக்க
என்போலும் பேதைமையோர் தேடியறி யொண்ணாத விளைத்தவிந்தைப்
பொன்போலும் புரிசடையி லேற்றுமுனை யருந்துணையாப் போந்தடைந் [தேன்
றன்பாலின் னருள்புரிதல் கடன்கதிவே றிலைசின்னாஞ் சாமித்
[தேவே. [30]

(இ-ள்) ஒப்பிலாத மோக்ஷ இன்பத்தைத் தன்னுடைய அடியார்க்கு சந்தோஷித்துக் கொடுக்க உன்னைப்போல ஓர் தெய்வத்தையும் என்னைப் போல் அறியாமை மிகுந்தவனையும் எவ்வுலகுந்தேடி யறியமுடியாது, தக்கன் சாபத்தினால் கலைகள் குறைந்து வரப்பெற்ற சந்திரனைப் பொன்னிறம் வாய்ந்த முறுக்குப் பொருந்திய சடையிற் பாதுகாத்துவைத்த உனது கிருபையைநோக்கி உன்னைக்கிடைத்தற்கரிய துணைவனாக அடைந்த என்னிடத்துத் திருவருள் செய்தல் கடனாகும் வேறுகதி யில்லையாதலினாலே.

முற்றும்.

# நெஞ்சறிவுறுத்தல்.

சங்கர சங்கர சம்பு—சிவ
சங்கர சங்கர சங்கர சம்பு.

139935

ஆதியு மந்தமு மில்லா—வரு
ளானந்த மாயவன் றன்னரு ளாலே
போதிபொன் னம்பலந் தன்னி—னடம்
போற்றுப தஞ்சலி சேடனுக் காமே. (சங்கர)

அல்லாரு மாணவ மாய—விருட்
டாரும்வ ளாகந்த னில்லொரு செய்கை
யில்லாம லேங்கிட மாயை—தனி
லீட்டுஞ்ச ரீரமுன் னுயவை தந்தான். (சங்கர)

0-1194 MMVI
N13

வந்தனை தன்வயிற் றேன்றிப்—புவி
மாரனெ னும்படி சந்தமு திர்ந்து
தந்தினை நுண்ணிடை மாதர்—மயில்
தன்னியு லன்னமென் னின்னடை கண்டு (சங்கர)

மையல்கொண் டங்கவர் பின்னே—யடுத்
தானந்தங் கொண்டுரை யாடியி சைந்து
மையல்கொள் கண்ணம்பின் மாழ்கி—முக
வான்மதி யோகுழன் மேகமோ வென்றும் (சங்கர)

எண்மலர் துண்டமோ முத்தங்—கோப
மோகனை முல்லைய ரும்புகை யோவாய்
வண்மல ராம்பலோ வஞ்சொல்—மாவின்
வாழ்குயி லோகவுள் கண்ணடி யாமோ. (சங்கர)

வாருறு வள்ளையோ கன்னம்—பிறை
மாமதி யோநுதல் கந்தரம் பாளை
வார்தரு பூங்கமு கோமென்—புய
வாரணை யோகரங் காந்தளோ மன்னும். (சங்கர)

கூர்ப்பாம் யாழ்விரல் தானுற்—பலங்
கூர்மண மென்முகி ழோவுகிர் மென்கால்
பார்கொளு மன்மத னுந்தக்—கட்டு
பாய்பரிச் செய்யவா யோதனஞ்செப்போ (சங்கர)

ஆலிலை யோவயின் சித்த—சன்கை
யாலைவிற் பூட்டுசெ ரும்புகா ணென்றோ
கோலமா ரவ்வயி னோரல்—மயிர்
கொன்னொழுங் குந்திதா னஞ்சுழி யாமோ (சங்க...)

மின்னலோ கைப்பிடி யோசிற்—றிடை
வில்லெறி பொன்குயில் கூவிரி யோவஞ்
சின்னங்க வான்றுணை மந்த—மாவின்
செங்கர மோமுழந் தாளிணை ளெண்டோ. (சங்கர)

நாழிகை யோகணைக் கால்த—ராசின்
தட்டிணை யோபர டேர்புறந் தாளின்
வீழுறுங் கூர்மமோ பாதங்—கொண்ட
மெல்விரல் வித்துரு மத்துணி யாமோ. (சங்கர)

என்னவம் மெல்லிய லாரை—யுற
வேத்திவி ரும்புபெ ரும்பொரு ளீந்து
சொன்னமெ லாங்கொளை கொள்ள—முகஞ்
சோர்ந்துபின் னில்லறங் கொண்டும கிழ்ந்து (சங்கர)

பாழாசை யாங்கனல் மூள—வந்தப்
பாவிம னக்குரங் கோடிப்பொன் றேட
வேழாழி சூழுல கங்க—ளெங்கு
மேகிய ருங்கன மீட்டியிற் சார்ந்து (சங்கர)

இன்பமே வாஞ்சைகொண் டோடி—நாளும்
ஈர்க்கும வாவழி சென்றுசென் றுன்னம்
வன்பந்த முற்றலை கின்றூ—யினி
வன்கண்மி குந்தகா லன்பாச முந்தி (சங்க...)

ஆவியை வாங்குமந் நேர—முனக்
கார்துணை கூறுக நெஞ்சமே யென்றும்
ஆவித மக்கெலா மாவி—யான
அற்புத பொற்சபை யிற்பத மூன்றி (சங்கர)

ஓர்பத மோச்சியே யாடு—கூட
ராசனே வந்தனன் றீபகம் போல
நார்கொளு மானிடர்க் கின்ப—முத்தி
நல்கிட வாட்டுவே ணுணவக் கட்டு.

துன்பமே தந்திடும் பொன்னை—யுறச்
சூழ்ந்துல கெங்குமலைந்தனை மண்ணோர்
மன்பெரி யானெனச் சொல்ல—முயல்
வம்பினை விட்டொழி வாய்சுக மேவும். (சங்கர)

வஞ்சக ருண்டேயு னைப்போல்—நெஞ்சே
மாயமா குந்தனு மெய்யெனக் கொண்டாய்
தஞ்சமென் றுதனை நேசி—தடை
தானின்றி பாவமா மூட்டைகள் சாரும் (சங்கர)

இச்சையு வர்ப்பினை யுற்றாய்—நெஞ்சே
யென்றுந் தீ ராதவி லங்கெனுஞ் சன்மத்
தச்சம டைந்தனை பின்னும்—மரன்
அன்றரு வாகம நீதியி னில்லாய். (சங்கர)

வாளியேர் கண்ணியர் மாவி—னங்க
மாநிலந் தன்னில்புன் காமமென் கூழை
தாளினு னட்டுவி ளைத்த—பவ
வாரியின் வாங்கினை பூதியாங் காணி. (சங்கர)

மாணி—மாகவந் திங்குப்—பெறு
மாபய னின்னதென் றோர்தல்செய் யாது
மாணிகல் நோக்கியர் சொல்லை—வேத
வாக்கிய மென்னநீ கொண்டினை கின்றாய் (சங்கர)

நஞ்செய லொன்றுமிங் கில்லை—யறி
நண்ணும யக்கினுற் சென்றுசென் றென்றும்
வெம்பவ மாகடல் மூழ்கி—துனி
மேயின முய்வகை காணில நெஞ்சே. (சங்கர)

நம்பாவு னக்கோல மென்ன—நமன்
தன்னரு கிற்கவர் செய்கையொ ழித்துப்
பம்புதன் றுளினின் மாணி—தன்னைப்
பாருளோ ரேத்தவை புண்ணியன் கண்டாய். (சங்கர)

எண்ணரும் பாவங்க ணீசெய்—தாலும்
எந்துவிண் ணீர்மதி மாற்றிய நாதன்.
விண்ணவர் தம்மிறை யைய—மிலை
மேவிடி னாரு ளீகுவன் நெஞ்சே. (சங்கர)

தீவினை செய்துழல் மாக்க—ளுய்யத்
தென்முகங் கல்லாலின் கீழமர்ந் தன்று
நாவினை நான்மறை சான்ற—நால்வர்
நாடிய ஞானமு ரைத்தவன் வந்தான். (சங்கர)

பஞ்சணி மென்பத மாதர்—மயற்
பட்டுழ லேழையர் தாமுயப் போந்தான்
நெஞ்சமெழுந்திடத் தஞ்ச—மென்ற
தானவ ருய்யுமா செய்தவன் காணே. (சங்கர)

ஆசையென் வேலைக டந்தார்—தம
தன்பெனுங் கண்ணிய கப்படு வானிப்
பாசத்தின் வன்மைகெ டுக்குந்—தூய
பண்ணவன் சின்மய தேசிகன் கண்டாய் (சங்கர)

வன்பவ நோய்தீர்ம ருந்து—விந்த
மாதலம் பொய்யென்று கண்டவ ருண்பார்.
பொன்னில மாதர்க ளென்ற—பாசப்
போரினை மாற்றவல் வில்லவர் தேரார் (சங்கர)

என்றுமி றந்திடும் பான்மை—தனை
யேத்தும னத்தவர்க் குற்றிடா வண்ணம்
ஒன்றவே செய்யுஞ்சஞ் சீவி—யதை
யொற்றுமை யுற்றடை வாரெவ ருண்டு. (சங்கர)

பொல்லாத வன்னெஞ்ச மாக்கள்—சொலும்
புத்தியைக் கேளாது வேண்டுவ நல்கும்
வல்லாளன் சின்மய நாதன்—சென்னை
மாநகர்ச் செல்வன்றன் பொன்னடி போற்றாய். (சங்கர

செங்கரங் கூடுசி ரத்தர்—நின்று
சின்மய தேசிகன் சந்நிதி தன்னிற்
பொங்கர வோசையொ டாடிப்—பதம்
போற்றுவர் தம்வச மில்லவ ராவர். (சங்கர)

கல்லினும் வன்மையை யுற்ற—நெஞ்சே
கண்டந்த வாடலைப் பாடலை நீயும்
புல்வினை யோர்கண மேனு—நினை
போகமெல் லாமடை வாயிது திண்ணம். (சங்கர)

சின்மயதேசிகன் றிருவடிவாழ்க. முற்றும்.

600 008